செ.வெ.எண்: 550 /2016 நாள்: 19.08.2016

# பத்திரிகைச் செய்தி

சென்னையில் இயங்கி வரும் அகில இந்திய குடிமைப்பணி தேர்வுப் பயிற்சி மையத்தில் இந்திய குடிமைப் பணிகளுக்கான முதல் நிலை தேர்வுக்கு பயிற்சி அளிப்பதற்கு (Preliminary Examination) மாணவர்களை சேர்த்திட 13.11.2016 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெறவுள்ள நுழைவுத் தேர்வுக்கான விண்ணப்பங்கள் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் 22.08.2016 முதல் 22.09.2016 வரை வழங்கி திரும்ப பெறப்பட உள்ளன.

குறைந்த பட்ச கல்வித்தகுதியாகிய இளங்கலை பட்டப்படிப்பு (BA,B.Sc, B.Com) மற்றும் தொழிற்பட்டபடிப்பான B.E, M.BBS, B.D.S, B.VSC, B.SC(Agri) மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்படிப்புகள் முடித்தவர்கள் இத்தேர்வுக்கு விண்ணப்பிக்க தகுதியானவர்கள் ஆவார்.

இத்தேர்வுக்கு விண்ணப்பிக்க

குறைந்த பட்ச வயது அனைத்து வகுப்பினருக்கும் - 21

அதிகபட்ச வயது இதர வகுப்பினர் - 32

மேற்குறிப்பிட்ட உச்ச வயது வரம்பிலிருந்து கீழ்க்கண்டவர்களுக்கு விலக்களிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| ஆதிதிராவிடர் , அருந்ததியர் மற்றும் பழங்குடியினர் | - 5 வருடம் |
| பிற்படுத்தப்பட்டோர் , பிற்படுத்தப்பட்டோர் முஸ்லிம் , மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | - 3 வருடம் |
| மாற்றுத்திறனாளிகள் | - 10 வருடம் |

பயிற்சி மையத்தில் பயிற்சி பெற தமிழ்நாட்டை சார்ந்த மாணவ / மாணவியர்கள் மட்டுமே தகுதியுடையவர் ஆவர்

பாண்டிச்சேரி உட்பட இதர மாநிலத்தைச் சேர்ந்த மாணவர்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள் ஆவர்

விண்ணப்பங்களை 22.08.2016 முதல் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பத்துடன் கல்வி, வயது, சாதி மற்றும் இருப்பிடம் சான்றிதழ்கள் நகல்களையும் இணைத்து 22.09.2016 மாலை 5.45 வரை கன்னியாகுமரி மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் வழங்கலாம். அதற்கு பிறகு வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. எனவே தகுதியான மாணவர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ஒம்) சஜ்ஜன்சிங் ரா.சவான்
மாவட்ட ஆட்சித் தலைவர்
கன்னியாகுமரி மாவட்டம

/உண்மை நகல் - உத்தரவுப்படி/

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.